No.C.06/2026 10.03.2026

# பசிப்பிணி ஒழிப்பு ஞாயிறு - 22.03.2026

**இயேசு கிறிஸ்துவில் அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, இறைமக்களே!**

நம்மைப் படைத்து வாழ்விக்கும் இறைத்தந்தையின் அன்பும், மானுடம் மாண்பு பெற தன்னுயிர் ஈந்த இறைமகன் இயேசுவின் அருளும், முழுமையை நோக்கி வழிடத்துகின்ற தூய ஆவியாரின் ஆற்றலும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார் (எபே 2:4). இத்தகைய அன்பும் இரக்கமும் உள்ள இறைமகன் இயேசுவின் பாடுகளையும், உயிர்ப்பையும் சிந்தித்து, நம்மை மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கும் காலம் தவக்காலம். இத்தவக்காலத்தில் நம்மையே நாம் புதுபித்துக் கொள்வதற்கும், கடவுளின் வார்த்தையை நம் வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டு நம் சிந்தனைகள், அணுகுமுறைகள் மற்றும் செயல்பாடுகளை இன்றைய காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப மறுவாசிப்பு செய்து வாழ்வாக்கிட உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

## பசிப்பிணிக்கு எதிரான தவக்கால பரப்புரை

அமைதி, மாண்பு, புவி பாதுகாப்பு என்ற ஒன்றிணைந்த இலக்கு நமது தவக்கால முன்னெடுப்புகளில் மையம் பெற திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கிறது. “நமது பங்குகள், குடும்பங்கள், திருஅவைச் சார்ந்த குழுக்கள், துறவறசபைகள் என அனைத்துமே இத்தவக்காலத்தில் ஒன்றுப்பட்ட பயணத்தை மேற்கொள்ள அழைக்கப்படுகின்றன. இதில் இறைவார்த்தையைக் கேட்பதோடு மட்டுமல்லாமல், ஏழையரின் அழுகுரலையும் பூமியின் வேதனையையும் கேட்பதும் நமது சமுக வாழ்வின் ஒரு பகுதியாக வேண்டும்” என்ற திருதந்தை லியோவின் தவக்காலச் செய்தியை நமதாக்க முனைப்புடன் செயல்படுவோம்.

இன்றைய சூழலில் ஏழையரின் நிலை முன்பைவிட மிக மோசமாகி வருவதையும் ஏராளமான மக்கள் வறியவராக்கப்பட்டு

வருவதையும் நாம் காண்கிறோம். ஏகாதிபத்திய பொருளாதார அமைப்புகளும் போர் சூழல் உருவாக்கங்களும் ஏழையரை பெரிதும் பாதிக்கின்றது. இயற்கைச் சூழலியல், மக்கள் பண்பாடு போன்றவற்றின் அடித்தளங்கள் அழிக்கப்படுகின்றன. வறுமையின் தீவிரத்தன்மையும், பருவநிலை மாற்றம் நிகழ்த்தும் அழிவுகளும், நோய்களின் தொற்றுப் பரவலும் நம்மைக் கவலைக்குள்ளாக்குகிறது. இதன் விளைவாக, நலமான வாழ்வின் அனைத்து வடிவங்களும் அழிக்கப்பட்டு மானிடருக்கு சொல்லொண்ணா சீரழிவுகள் ஏற்படுகின்றது.

## இயேசுவின் பார்வை நமது பார்வையாகிட...

பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் மட்டில் இயேசு பரிவும் பாசமும் கொண்டிருந்தார். பசியோடிருந்த கூட்டத்தினரைக் குறித்து இயேசு தம் சீடரிடம் "நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவு கொள்கிறேன்" (மாற் 8:2) என்றார். பல வேளைகளில் இயேசு மக்களிடம் 'அழாதீர்' (லூக் 7:13), "அஞ்சாதீர்" (மாற் 5:36), "துணிவோடிருங்கள்" (மாற் 6:50), "கவலைப்படாதீர்கள்" (லூக் 10:41) எனக் கூறி தனது கரிசனையை ஏழையர் மீது வெளிபடுத்துகிறார். ஏழையரோடு இயேசு தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஏழைகளுக்குச் செய்தது எல்லாம் இயேசுவுக்குச் செய்தவையே; இவர்கள் அவரது சாயல்கள், பூவுலகில் அவரது பிரதிநிதிகள்.

'சமூக அக்கறை' என்ற மடலில் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் "ஏழையருக்கு முன்னுரிமை என்பது கத்தோலிக்க சமூகப் படிப்பினையின் நிலையான போதனையாகும்... இந்த முன்னுரிமை உலகளாவிய அளவில் பசியாலும் பட்டினியாலும் தவிக்கும் மக்கள், இல்லமற்றோர், மருத்துவ உதவி இல்லாதோர், வாழ்வில் நம்பிக்கை இழந்தோர் மட்டில் வெளிப்பட வேண்டும்" எனக் கூறுகிறார். இதன் அடிப்படையில் தேவையில் உழல்வோரின் துயரத்தில் அக்கறையோடு பங்கு பெறுவதும், அன்புநிறை உள்ளத்தோடு உதவுவதும் ஒவ்வொரு பங்கு தலத் திருஅவையின் கடமையாகும்.

இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி 'வறுமையில்லா உலகு' என்ற இலட்சியத்தை கண்முன் கொள்வோம். 'எம் பங்கில் வறியோர் எவரும் இல்லை' என்ற நிலையை உருவாக்குவோம். நம் பங்குகளில் ஏழையர் நலனில் அக்கறையோடு பல நலத்திட்டங்களும், உதவிகளும்

முன்னெடுக்கப்படுவதை நான் நன்கறிவேன். இயேசுவின் பார்வையில் ஏழையர் நலன் காக்கும் பணியில் ஆர்வத்தோடுச் செயல்படுகின்ற அனைவரையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

**நமது மறைமாவட்டத்தில்...**

ஒவ்வோர் ஆண்டும் சிறப்பிப்பதுபோல உலகளாவியத் திருஅவையோடு இணைந்து நமது கோட்டாறு மறைமாவட்டத்தில் தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறைப் (22.03.2026) பசிபிணி ஒழிப்பு ஞாயிறாக எல்லாப் பங்கு, கிளைபங்குத் தளங்களில் கொண்டாட அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதம் 26ஆம் நாள் ஞாயிறு அன்று நம் ஆலயத்தில் சிறப்புக் காணிக்கைக்கு ஏற்பாடு செய்தும் எல்லா குடும்பங்கள், அன்பியங்கள், திருதூதுக் கழகங்கள், இயக்கங்கள், ஏனைய பிற பங்கேற்பு அமைப்புகளைச் சார்ந்த ஒவ்வொருவரிடமிருந்து காகித உறைகள் வழியாகத் தாராள நன்கொடைகளைப் பெற்று, கோட்டாறு மறைமாவட்ட சமூகப்பணி மையமாகிய கோட்டாறு சமூக சேவை சங்கத்தில் ஒப்படைத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

"மிக சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:40) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்போம். இந்தத் தவக்காலத்தில் வறியவர்களின் தேவைகளை நமது சிறு சிறு உதவிகள் வழியாக நிறைவு செய்வோம். மனித நேயம் மலர நாம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் அதற்கு செயல்வடிவம் கொடுக்க தியாக மனநிலையோடு உழைக்கும் உங்கள் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசிர்வதிப்பாராக!

*கிறிஸ்துவின் மனநிலையில்,*

Sd/-

**ஆயர் நசரேன் சூசை** (கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் 15.03.2026 ஞாயிறு அன்று அனைத்து ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் திருப்பலியின் போது வாசிக்கப்பட வேண்டும்.